# மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆகமம் சாரா வழிபாட்டில் பயன்படுத்தப்படும் வாத்தியங்கள்

தங்கராசா கோபிநாத்[1]

**ஆய்வுச்சுருக்கம்:**

*மட்டக்களப்பு மக்களது வாழ்வியலில் காணப்படும் தனித்துவ சிறப்பம்சங்களில் ஆகமம்சாரா வழிபாடு இன்றியமையாத ஒன்றாகும். ஆகமம் சார்ந்த வழிபாட்டினைப் பார்க்கிலும் ஆகமம்சாரா வழிபாட்டில் மக்கள் ஈடுபாடும் நம்பிக்கையும் அதிகமாகத் தொன்றுதொட்டுக் காணப்படுகின்றது. ஆகமம்சாரா வழிபாடானது இசைப்பாடல்கள், இசைக்கருவிகளுடன் பாரம்பரியமாக நிகழ்த்துகை வடிவில் இடம்பெறுகின்றது. ஆகமம்சாரா வழிபாட்டில் பாடப்படுகின்ற காவியம், உலா, அம்மானை, கும்மி, ஊஞ்சல், அகவல், பள்ளு என அனைத்து இசைவடிவங்களும் இசைக்கருவிகளின் உதவியுடன் பாடப்படுகின்றன. இங்கு கையாளப்படும் இசைக்கருவிகளாக பறை, உடுக்கு, மத்தளம், சங்கு, கொட்டு, சிலம்பு, அம்மானைக்காய், மணிகள் என்பவற்றைக் கூறலாம். இந்த இசைக்கருவிகள் அதிகமாக தோற்கருவிகளாகவும் கஞ்சக்கருவிகளாகவும் காணப்படுகின்றன. இங்கு பாடப்படும் இசைவடிவங்களைக் கேட்கும் மக்களுக்கு உளஆற்றுகைப்படுத்துவது போன்று இருக்கும். இதற்குக் காரணம் இசைவடிவங்களுடன் இசைக்கருவிகளும் இணைந்து ஒலிப்பதாகும். கலைக்கண்ணோட்டத்தில் பார்க்கின்ற போது இவ்வழிபாட்டுமுறைகள் வேலன் வெறியாடல் போன்ற சங்ககால நிகழ்த்துகை மரபினை ஒட்டி நிற்கின்றன. சடங்கு மரபில் பாடப்படுகின்ற இசைவடிவங்கள், பாடுகின்ற கலைஞர்கள், இசைக்கப்படுகின்ற இசைக்கருவிகள், அலங்கார அமைப்புக்கள், ஆலயப் பின்னணி என்பன சிறந்த ஒரு ஆற்றுகை நிகழ்வினை மனங்களின் முன் கொண்டு வருகின்றது. இந்த ஆய்வுக்கட்டுரையானது விபரணஆய்வு, களஆய்வு, வரலாற்றுஆய்வு முதலிய ஆய்வியல் முறைகளில் எழுதப்பட்டுள்ளது. ஆகமம்சாரா வழிபாட்டில் பயன்படுத்தப்படும் இசைக்கருவிகளின் தனித்துவங்கள், பங்களிப்புக்களை உலகறியச்செய்வதனை ஆய்வு நோக்காகக் கொண்டு இந்த ஆய்வுக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.*

**திறவுச்சொற்கள்:** ஆகமம்சாரா வழிபாடு, நிகழ்த்துகை, இசைக்கருவிகள், மட்டக்களப்பு

[1]*சுவாமி விபுலாநந்த அழகியற் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம்.*
kopinathth89@gmail.com

**அறிமுகம்**

மட்டக்களப்பு பிரதேசத்தில் வாழும் மக்கள் வாழ்வியல், ஆகம வழிபாடு, கலைகள், தொழில், சடங்குகள் என அவர்களது அனைத்து செயற்பாடுகளிலும் இசைக்கும் இசைக்கருவிகளுக்கு முக்கிய இடத்தினை வழங்கியுள்ளனர். அந்த வகையில் இங்கு காணப்படும் வாத்தியங்களாக பறை, உடுக்கு, மத்தளம், சிலம்பு, அம்மானைக்காய், மணிகள், சங்கு, சவணிக்கை, கஞ்சிரா, ஊதுகுழல், தம்பட்டை, தாளம் என்பவற்றைப் பயன்படுத்தி வருகின்றனர். இவ் வாத்தியங்களில் தோற்கருவிகளே அதிகமாக பயன்படுத்தப்படுகின்றன. மற்றும் இவ் வாத்தியங்கள் பெரும்பாலும் நாட்டார் இசைக்குரிய இசைக்கருவிகளாகவே காணப்படுகின்றன.

**பறை**

ஆய்வுப் பிரதேசத்தில் பறையானது சடங்குகளிலும், மக்களது வாழ்வியற் சடங்குகளிலும், கூத்து நிகழ்வுகளிலும் பிரதான இடத்தினை வகிக்கின்றது. ‘‘பறை’’ என்பது ‘‘பேசு பொருள்’’ எனப்படுகின்றது. ‘‘அறை’’ என்ற சொல்லில் இருந்து பறை உருவானது எனலாம். கற்காலம் முதல் தகவல் தொடர்பு சாதனமாகவும் கருதப்பட்டது. இதனை அடித்து மக்களுக்கு தகவல்களை சொல்லுதல் பண்டைய காலத்தில் வழக்கமாக காணப்பட்டது.

மட்டக்களப்பு கோயில்களில் பயன்படுத்தப்பட்ட பிரதான வாத்தியம் தவிலாகும். பறை தொன்று தொட்டு சாதியத்தின் அடையாளமாக காணப்பட்டது. அதே நேரத்தில் இதனை பறையர் எனும் சாதியினர் அடித்தால் இதனை தவில் என்ற சொல்லுக்கு பதிலாக பறை மேளம் என அழைப்பர். பெரும்பாலும் அனைத்து ஆகமம் சாராத ஆலயங்களிலும் இதனை பயன்படுத்தியுள்ளனர். அவற்றில் குறிப்பாக குமாரத்தன், பெரியசாமி சடங்குகளில் பறை மிகவும் இன்றியமையாத இசைக்கருவியாகப் பயன்படுத்தினர். குமாரத் தெய்வச் சடங்கு ஆலயங்களில் குமாரத்தன் காவியத்தினை பாட ஒருவர் அக்காவியத்திற்கு அணிசேர்க்கும் வகையில் பறை அடிக்கப்படும். இதனை தற்காலத்திலும் பாணமை, பொத்துவில், அக்கரைப்பற்று, ராணமடு, புல்லுமலை, திகிலிவட்டை, கதிரவெளி போன்ற கிராமங்களில் அமைந்துள்ள குமாரத்தன் கோயில் சடங்குகளில் பறை அடித்தலே சடங்கினை பக்தியின் ஊடாக இட்டு செல்வதாக கள ஆய்வில் அறியக் கூடியதாக இருந்தது. அதுமட்டுமன்றி பெரியசாமி சடங்குகளில் அடிக்கப்படும் பறையின் ஒலியானது சிங்கள மக்களில் வேடுவர் இனக் குழும மக்களது கதிர்காம முருகன் ஆடி உற்சவ இரவு ஊர்வலத்தில் (பெரஹரா) வாசிக்கப்படும் தவிலடிக்கு இணையாகவும், ஒத்த ஒலியையும் எழுப்பக்கூடியதாக இருக்கின்றது **(மகேஸ்வரலிங்கம், கு., 2008:133).**

**ஆலயங்களில் பறைமேள இசை**

ஆய்வுப் பிரதேசத்தில் அதிகமாக கிராமிய சிறு தெய்வ சடங்கு கோயில்களில் பறைமேளம் இசைக்கப்பட்டன. இங்கு பறைமேளத்துடன் சொர்ணாழி, குழல், சிலம்பு, அம்மானைக்காய், உடுக்கு, தாளம் என்பன ஆலயங்களில் பயன்படுத்தப்பட்டாலும் சொர்ணாழி எனும் ஊதுகுழலும், பறைமேளமும் சேர்ந்து சடங்கில் கடல் நீர் எடுத்துவரல், பூசைகள், அபிஷேகம், தெய்வாதிகளை உருவேற்றுதல், வாழிபாடுதல் போன்ற நிகழ்வின் போது இதனை இசைப்பர் பறைமேள அடிக்கு ஏற்ப சொர்ணாழி ஊதப்படும். இதனால் ஆலயங்களில் அபிஷேகத்தாளம், அரட்டுத் தாளம் (அழைப்புத் தாளம்), சுற்றுலாத் தாளம், பெரிய பூசைத்தாளம் என்பன நிகழ்வுகளுக்கு ஏற்ப வாசிக்கப்படும். மற்றும் கண்ணகி, மாரியம்மன் கோயில் சடங்குகளிலும் இதனை சொர்ணாழியுடன் சேர்த்துப் பயன்படுத்துவர். தற்காலத்தில் பறை சாதியத்தின் அடையாளமாக கருதப்படுவதனால் இதனை மக்கள் கற்க விரும்புவதில்லை.

**பறைமேளத்தின் வாசிப்பு முறைகளும், சொற்கட்டுகளும்**

இது ஒரு தோற்கருவியாகும். அத்துடன் தாளக்கருவியாகவும் பயன்படுத்தப்படுகின்றது. இரு பக்கமும் மிருகத் தோலாலும் நடுவில் மரத்தால் செய்யப்பட்ட மர உருளை வடிவமே பறையாகும். இது ஒரு அடி ஒன்றரை அடி விட்டம் கொண்ட மரக் கொட்டில் இரு பக்கமும் பொருத்தப்பட்ட தோல் வாத்தியம் ஆகும். மற்றும் இதன் வாசிப்பு மங்கல நிகழ்வு, அமங்கல நிகழ்வு, சடங்குகள், கலைநிகழ்வு என நிகழ்வுகளுக்கு ஏற்ப வாசிப்பு முறைகளும், சொற்கட்டுகளும் வேறுபடும். பறையொலிக்கு தாளக்கட்டுக்கள் இல்லை. ஆனால் சொற்கட்டுக்களுடன் ‘‘டொம் டொம்’’ என்ற ஒலியையே அடிப்படையாகக் கொண்டுள்ளனர். ஆலயத்தில் காவடி, தெய்வாதிகள் ஆடுதல், போன்ற நிகழ்வுகளில் ஆட்டத்திற்கு ஏற்ப சொற்கட்டுகள் வாசிக்கப்படும்.

**அரட்டுத் தாளம் (அழைப்புத் தாளம்)**

மக்களை ஆலயத்திற்குள் அழைக்க பயன்படுத்தப்படும் தாளம் அரட்டுத் தாளம் எனப்படும்.

(உ-ம்) டாங்குடு டாங்குடு டட்டாளம் கெயித்து கேட்டாம்
டாங்குடு கேட்டாம்..........டாங்குடு கேட்டாம்.

**ஆட்ட தாளம்**

சடங்கு ஆலயங்களில் தெய்வாதிகளை பூசாரிகள் மந்திர உச்சாடனம் மூலம் உருவேற்றி தெய்வமாடத் தயார்படுத்துவர். அவ்வேளையில் ஆட்ட தாளம் இசைக்கப்படும்.

“வந்துவிடு சன்னதம்.. வா வா சன்னதம்

வந்துவிடு சன்னதம்...வா வா சன்னதம்

வந்திங்கு சன்னதம்.. வந்துவிடு சன்னதம்”

இத்தாளத்துடன் உடுக்கடியும் சேர்ந்து ஒலிக்கும் போது பக்திரசத்தினையும் தெய்வம் ஆடுபவர்கள் தன்னை மறந்து ஆடும் நிலைக்கு இட்டு செல்லும் எனலாம்.

**அபிஷேகத் தாளம்**

ஆகமம் சாராத ஆலயங்களில் சடங்கின் போது கர்ப்பகிரகத்தின் திரைசீலையை நீக்காது (பூசாரி) கப்புகனாரினால் அபிஷேகம் மேற்கொள்ளப்படும். இவ்வேளையில் ஆலயத்தில் புறச் சூழலில் இருந்து அபிஷேகத்தாளம் வாசிக்கப்படும். இதனை வாசிப்பதன் நோக்கம் அபிஷேகம் இடம் பெறுவதனை பக்தர்களுக்கு தெரியப்படுத்துவதாகும்.

“டாங்கு டண்டாம் டாங்குட டண்டாம்”

அபிஷேகத்தின் போது பறையுடன், சங்கு, மணிகள், சொர்ணாளி எனவும் சேர்ந்து இசைக்கப்படும். இவ் வேளையில் பெண்கள் குரவை ஒலியையும் எழுப்புவர் மற்றும் இத்தாளங்களைப் போல் சுற்றுலாத்தாளம், பெரிய பூசைத் தாளம் என்பனவும் சடங்குகளில் வாசிக்கப்படும் அதுமட்டுமன்றி பத்ததி முறையிலான ஆலயச் சடங்குகளில் இவ்வாத்தியம் வாசிக்கப்படுகின்றது. சக்தி வழிபாட்டில் நடைத்தாளமிடும் பறை ஒலியே ஆகும். ஆனால் வழிபாட்டின் போது ஆடுவதில்லை வாத்திய இசைமட்டுமே காணப்படும். ஆய்வுப் பிரதேச அம்மன் வழிபாடுகளில் குழல், குரவை ஒலி, சங்கு, மணி, சிலம்பு, உடுக்கு, சேகண்டி, அம்மானைக்காய் போன்ற இசைக்கருவிகளும் குரலிசையும் இருந்தாலும் பறைமேள ஒலியே பிரதான இடத்தை வகிக்கின்றது எனலாம்.

**மக்களது வாழ்வியலில் பறைமேள இசை**

இதே போன்று திருமண நிகழ்வுகளிலும் இடம்பெறும் ஒவ்வொரு சடங்கு சம்பிரதாயங்களுக்கு ஒவ்வொரு விதமான தாளங்கள் வாசிப்பது தனித்துவமும், சிறப்புமிக்கதுமாகும் எனலாம். அந்த வகையில் வரவுத்தாளம், கோணங்கித்தாளம், இராச தாளம், பல்லாங்குத் தாளம், நாலடித் தாளம், ஆறடித்தாளம், ஏழடித்தாளம், எட்டடித்தாளம், பூட்டுத்தாளம், தட்டுமாறும் தாளம் என்பனவாகும். இதே போன்று மரண வீடுகளில் அடிக்கப்படும் பறை சாப்பறை எனப்படும். மரண வீட்டில் அடிக்கப்படும் பறை இசை

“டாண்...டாண்..டாங் கிடாம்

டாங்கே..டாங்கடுகே...கிடுகிடாங்...கிடுகே”

இங்கு இறுதி அஞ்சலிக்காக மனிதர்கள் வருகின்ற போது சாப்பறையினை அடித்து ஒலி எழுப்புவர். மக்கள்(ஆட்கள்) வராத வேளையில் ஓய்வெடுப்பர். இடையிடை மக்கள்

வரும்போது பறை அடித்து மக்கள் மரணவீட்டிற்கு வருவதனை தெரியப்படுத்துவர். இங்கு ''ஆரம்ப தாளம்'' வாசிக்கப்படும் மரண வீட்டிற்கு மக்களின் வரவை அறியப்படுத்தும் விதமாக இதனை வாசிப்பர். இதே போன்று ஆய்வுப் பிரதேசத்தில் கூத்துக்களில் பறைமேளக் கூத்து தனி ஒரு இடத்தினை வகிக்கின்றது. இங்கு ஆரம்ப தாளம், பூசைத்தாளம், கோணங்கித் தாளம், இராக வரவுத் தாளம், வரிசைத் தாளம், நாலடி, ஆறடி, எட்டடி, பூட்டுத் தாளம், தட்டுமாறும் தாளம், என பலவகைத் தாளத்தை பறை மேளத்தில் இசைப்பர்.

இதனைத் தற்காலத்தில் நாடக, நடன, இசைத் துறை மாணவர்களும் கலை நிகழ்வுகளில் ஆற்றுகை செய்வர் எனவே பண்டைய காலம் முதல் தற்காலம் வரை பறை ஆய்வுப் பிரதேச மக்களது வாழ்வியலில் இன்றியமையாத இடத்தினைப் பெற்றுள்ளது. அதுமட்டுமன்றி இதனை வாசிப்போர் தற்காலத்தில் பறையர் சாதியர் மட்டுமே ஆகும் எனவே பறை தற்காலத்தில் சாதியத்தின் அடையாளமாகக் கருதப்படுகின்றது. மற்றும் பறையினை பல்வேறு வகையில் வாசிப்பவரை ''மூப்பனார்'' என அழைப்பர்.

### உடுக்கு முறை கூறல்

உடுக்கடித்தலுடன் தொடர்புடையதாக ''உடுக்குமுறைகூறல்'' என்னும் சடங்குடன் கூடிய நிகழ்வு இடம்பெறும். அதாவது உடுக்கு அடித்தலுடன் தொடர்புடைய 12 வினாக்கள் உள்ளதென்றும் அவ்வினாக்களுக்கு விடையளிக்கத் தெரிந்தவனே உடுக்கடிப்பதற்கு தகுதியுடையவன் என்று சடங்கு நிகழ்வினை நடாத்துகின்ற பூசகர்கள் கூறுகின்றனர். சடங்கில் ஒருவர் உடுக்கடித்துக் கொண்டிருக்கும் போது அவரிடம் ஒருவர் வந்து உடுக்கு முறைகூறு எனக்கேட்டால் அவர் பதில் கூற வேண்டும் அவ்வாறு கூறாதவன் உடுக்கடிப்பதற்கு தகுதியற்றவன் எனக்கருதி ''உடுக்குமுறை'' கூறுமாறு கேட்டவன் உடுக்கடிப்பவரிடமிருந்து உடுக்கையைப் பறித்துத் தனக்குச் சொந்தமாக்கிக் கொள்வான். உடுக்குமுறை கேட்டலும், பதில் கூறுதலும் பாட்டாகவே இடம்பெறும்.

### மட்டக்களப்பு பிரதேசத்தில் உடுக்கை

ஆய்வுப் பிரதேசத்தில் உடுக்கு சடங்குகளில் பிரதான இடத்தினை வகிக்கின்றது. அதே நேரத்தில் கரகம் காவடி, பஜனை போன்ற கலை நிகழ்ச்சிகளிலும் கூத்துகளிலும் நாடக அரங்குகளிலும் இதனைப் பயன்படுத்தி வருகின்றனர். இலங்கையில் சி.சிதம்பரப்பிள்ளை அவர்கள் உடுக்கு வாசிப்பதில் பல பரிமாணங்களை மேற்கொண்டவர். ஆய்வுப்பிரதேசத்தில் சடங்குக் கோயில்களில் உடுக்கை வைத்து பல மந்திர உச்சாடனங்களை சொல்லி தெய்வாதிகளை உருவேற்ற பயன்படுத்துவர் (இன்பமோகன், 2012:142).

## உடுக்கைப் பாட்டு

### உடுக்கு முறை கேட்பவன்

“உடுக்கெடுத்துப் பிடித்த கைக்கு பொருளைச் சொல்லு
ஓங்கி வாங்கி அடித்த கைக்கு உபாயம் சொல்லு
துடுக்கெனவே வளையத்தின் பொருளைச் சொல்லு….”

### உடுக்குமுறைக்கு பதிலளிப்பவன்

“உடுக்கெடுத்துப் படித்த கைக்கு பெறுமாவாகும்
ஓங்கி வாங்கி அடித்த கைக்கு உகார மூர்த்தி
துடுக்கெனவே வளையத்தின் பொருளைக் கேளு உருத்திரனாரும்
தூங்குகின்ற சல்லடைக்கு விபரம் கேளு”

### உடுக்கு வாசிப்பு முறைமை

உடுக்கை வாசிக்கும் முறைகள் பல காணப்படுகின்றன. சிலர் வலது கையால் வாசிப்பார்கள். சிலர் வாசிக்கும் போது எல்லா விரல்களையும் சிலர் ஒரு விரலை மட்டும் பயன்படுத்துவது உடுக்கு வாசிப்பு முறைகளில் பொதுவானதாகும். இருந்த போதிலும் இப்படித்தான் வாசிக்க வேண்டுமென சில வாசிப்பு முறைகளும் காணப்படுகின்றன. பேய்களை விரட்டுவதற்காகவும், உருவேற்றுவதற்காகவும் ஒரு விரலால் மிகவும் ஆவேசமாகவும், வேகமாகவும் வாசிப்பார்கள். வாசிக்கும் போது இடையின் மீதுள்ள நாடாவை கையால் அழுத்தியும், தளர்த்தியும் வலது கையால் வாசிக்கும் முறைக்கேற்ப பிடிப்பார்கள். உடுக்கின் ஒலியினைப் பற்றி “மகாபாரத சூடாமணி” எனும் நூலில் கூறப்படுகின்றது. இதில் வாசிக்கப்படும் சொற்கட்டுகள் பாடலுக்கேற்ற வகையில் அமைந்திருக்கும் என அறியக் கூடியதாக உள்ளது. **(தேவன், வயது-65, ஆலய குருக்கள், தேற்றாத்தீவு )**

## வெண்கல உடுக்கு

ஆய்வுப் பிரதேசத்தில் உள்ள செட்டிபாளையம் எனும் கிராமத்தில் அமைந்துள்ள கண்ணகை அம்மன் ஆலயத்தில் வெண்கல உடுக்கு காணப்படுகின்றது. இதனை வருடாந்த கண்ணகி அம்மன் சடங்கின் போது மட்டுமே இசைப்பர். இது கண்ணகியின் சக்தியினைக் கொண்டு பூசாரியால் (கட்டாடி) இசைக்கப்படுகின்றது என்பது ஆய்வுப் பிரதேச மக்களது நம்பிக்கையாகும். செட்டிபாளையத்தில் காணப்படும் வெண்கல உடுக்கு சுமார் ஒன்றரை அடி உயரமும் ,9 அங்குல விட்டமும் கொண்டுள்ளது. அழகிய வேலைப்பாடுகள் குத்தியிலே காணப்படுகின்றது. குத்தியின் நடுவிலே ஒரு சிலம்பு போடப்பட்டுள்ளது. அது கழன்று விழாத வகையில் வார்த்துள்ளனர். இவ் உடுக்கினை சடங்கின் போது இயந்திரம் கீறப்பட்ட

மரக்குற்றியில் வைப்பர். அதன் மேல் வெண்கல உடுக்கை வைத்து மடையும், பூசையும் செய்வர். கலியாணக்கால் நாட்டிய சடங்கு அன்று இரவு இதனை மூலஸ்தானத்தில் மட்டும் இசைப்பர். பின்னர் இதனை ஞாயிறு இரவு கலியாணக்காலுக்கு முன் வைப்பர். திங்கட்கிழமை பகற் சடங்கிலும் இதனை அடிப்பர். மூன்று வேளை மட்டுமே இதனை அடித்து இசைப்பர். உடுக்கிற்குரிய யந்திர பலகை விஷேட அபிஷேகம் செய்த பின்னர் உடுக்கினை அதன் மேல் வைத்து சிலம்பு, வாழைச்சீப்பொன்று, கமுகம்பாளை இவை மூன்றினாலும் மூடி விடுவர். உடுக்கு செங்குத்தாக இருக்கும். பூசைகள் நடைபெற்று பின் உடுக்கு எடுத்து அடிக்க வேண்டிய வேளை வந்ததும் இக்கோயிலில் பூசகரை கட்டாடியார் என அழைப்பர். அவர் உடுக்கு மடையின் முன் மண்டியிட்டு அம்மனை வாயாலும் மனத்தாலும் பிரார்த்தனை செய்வார். இவ்வேளையில் கட்டாடியாரின் உடலில் உருவேற்றமும், நடுக்கமும் ஏற்படும். பின் கட்டாடியார் உடுக்கின் மீது வைக்கப்பட்டிருந்த சிலம்பினை எடுத்து தமது வலது கையில் அணிந்து கொள்வார். உடுக்கில் சல்லடம் நீண்டு கிடக்கும். அதனை எடுத்து கழுத்தில் அணிந்து கொள்வார். இடது கையினால் வெண்கல உடுக்கின் இடைப்பகுதியை பிடிப்பார்**(அரசரெத்தினம். ஆ., 1994:139)**

“தாயே வா, தாயே வா, தாயே வா, வா, வா..” என முணுமுணுத்தும், பெரிய சத்தமாகவும் கூறுவார். இவ்வாறு கூறுகின்றபோது அவ்வுடுக்கு “விர்”என உறுமும் சத்தத்துடன் மேலே எழும் கட்டாடியாரையும் உடுக்கு அந்தரத்தே தூக்கி விடும், பூசைக்கு உதவிக்கு நின்றவர்கள் கட்டாடியாரை தூக்கி பிடிப்பார்கள் கட்டாடியார் மூலஸ்தானத்தைப் பார்த்து மூன்று முறை அடிப்பார். பின் கிழக்கு, நேர் எதிர் திசையில், நடுவில் வந்து மேற்கு திசையில் என மூன்று முறை வீதம் ஒவ்வொரு திசையிலும் அடிப்பார். இவ்வாறு பூரண கும்பத்தை சுற்றி 3 தடவைகள் அடிப்பார். ஏனைய உடுக்குகள் கிடையாகப் பிடித்து ஒரு விரலால் மட்டும் தெறிக்கப்படும். ஆனால் வெண்கல உடுக்கு செங்குத்தாகப் பிடித்து கையினால் அடிக்கப்படும். உடுக்கு அடிக்கின்ற போது கட்டாடியார் சுய நினைவுடன் இருப்பதில்லை. 3 தடவை அடித்து முடிந்த பின் மீண்டும் இவ்உடுக்கினை உடுக்குக் குத்தியில் வைப்பது சற்று சிரமமானதாகும். இவ்வேளையில் உடுக்கினை தொட்டுவிட்டால் தீராத நோய்கள், பேய் பிசாசுகள், பில்லி வஞ்சனை, சூனியம் என்பன முற்றாக நீங்கிவிடும் என்பது ஆய்வுப் பிரதேச மக்களது நம்பிக்கையாகும்.

இவ்வெண்கல உடுக்கு செட்டிபாளையம் ஆலயத்தில் மட்டுமே வருடாந்த சடங்கின் போது பூசையில் மட்டுமே இதனைப் பயன்படுத்துவர். ஏனைய உடுக்குகள் ஏனைய சடங்கு ஆலயங்களிலும், பல்கலைக்கழக இசை, நடன, கூத்து அரங்குகளில் நிகழ்த்துகைகளின் போது இதனைப் பயன்படுத்துவர். மற்றும் இதனைப் பல சாஸ்திரிய சம்பிரதாயங்களுடன் சடங்கு வழிபாடுகளில் மட்டுமே அதிகமாக பயன்படுத்துகின்றனர். இதனை தாளத்துடன்,

பாட்டுக்கு ஏற்ப வாசிப்பது அனைவராலும் இயலாது. மற்றும் இதனை வாசிப்பது ஒரு கலையாகவே கருதுவர் எனலாம்.

**மத்தளம்**

தோற்கருவிகளில் மத்தளமும் அடங்குகின்றது. இதனை இருமுகத் தோற்கருவி எனவும் அழைப்பர். மற்றும் இதனை தென்னகத்திற்குரிய தேசிய இசைக்கருவி ஆகும். (Indigenous Instrument) தென்னக மத்தளமானது தொன்றுதொட்டு மரத்தால் செய்யப்பட்டு வருகின்றது. சங்க இலக்கியங்களில் மத்தளம் என்ற சொல்லோ, மிருதங்கம் என்ற சொல்லோ காணப்படவில்லை. தண்ணுமை எனும் பெயரில் ஒரு வகை மத்தளம் காணப்பட்டது. அதனை ''மடிவாய்த்தண்ணுமை'' என்று சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. ''மத்தளம்'' என்பது மத்து + அளம் பிரித்தால் ''மத்து'' என்பது உயர்வு என்றும், நடுவு உயர்ந்தது என்றும் பொருள் உண்டு எனவே மத்தளம் என்பது நடுவு உயர்ந்த நீள் உருளை வடிவமானது எனப் பொருள்படுகின்றது. (சுந்தரம், வீ. ப. கா, 2006:14)

**மத்தளத்தின் பங்களிப்புக்கள்**

ஆய்வுப் பிரதேசத்தில் வழக்கில் உள்ள நாட்டாரிசைக் கருவிகளில் மத்தளம் இன்றியமையாத ஒன்றாகும். கேரள நாட்டில் கதகளி பயன்படுகின்ற மத்தளம் ''சுத்த மத்தளம்'' ஆகும். மற்றும் ஆய்வுப் பிரதேசத்தில் ஆலய உற்சவங்களிலும், பொழுதுபோக்கு கூத்துக் கலைகளிலும், நடன நிகழ்வுகளிலும் மத்தளம் நிகழ்த்துகைகள் அனைத்தையும் உற்சாகமூட்டும் வகையில் மாற்றிவிடும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை எனலாம். ஆய்வுப் பிரதேசத்தில் காணப்படும் தனித்துவ கலை அம்சங்களில் கூத்துக்கள் பிரதான இடத்தினை வகிக்கின்றது. இங்கு ஆடப்படும் பிரதான கூத்துக்களாக வடமோடி, தென்மோடி கூத்துக்களை கூற முடியும். இங்கு வழக்கில் உள்ள கூத்துக்களில் மத்தளத்தின் பங்களிப்பு பிரதானமானது எனலாம். கூத்துப் பழகுபவரை ''அண்ணாவியார்'' என்பர். அண்ணாவியார் மத்தளம் அடிப்பதில் திறமை கொண்டவர். ஏனையோர் மத்தளம் அடித்தாலும் அண்ணாவியார் மத்தளம் ''அடித்தால் ''மத்தளம் பேசும்'' என்பது ஆய்வுப் பிரதேச மக்களது கருத்தாகும். வடமோடிக் கூத்துக்களிலும், தென்மோடிக் கூத்துக்களிலும் ஒரே வகையான மத்தளமே பயன்படுத்தப்படுகிறது என அறியக் கூடியதாக உள்ளது. ஒவ்வொரு கூத்துக்களின் பாடல்களும், தாளக்கட்டுகளும் வேறுபட்டவை ஆகும். தாளக்கட்டினை மத்தள ஒலியில் கேட்கமுடியும். கூத்துக்கள் நிகழ்த்துகை செய்யப்படும் போது மத்தளத்தின் தாளக்கட்டு நன்றாக ஒலிக்கும் போது மத்தளம் பேசுகின்றது என சபையோர் கூறுவது கூத்து இடம்பெறும் இடங்களில் பார்க்ககூடியதாக உள்ளது. வடமோடிக்கூத்துக்கள் வேகம் குறைவாகவும், அமைதியாகவும் இடம்பெறும். வடமோடிக் கூத்தின் வேகத்திற்கேற்ப மத்தளமும் அடிக்கப்படும்.

தென்மோடிக் கூத்து துரிதமும், வேகமும் கொண்டதாகும். இதற்கேற்ப மத்தளம் வேகமாக அடிக்கப்படும். இவ்வாறு கூத்துக்களினை பாத்திரங்களின் அறிமுகம், பாத்திரங்கள் களரிக்குள் வருதல், இடமாற்றங்கள், காட்சிகள் மாறுதல், சோக, சந்தோச உணர்வுகள் வெளிப்பாடு, என அனைத்து அம்சங்களுக்கு ஏற்ப மத்தள ஒலி கூடி, குறைத்து வாசிக்கப்படும். (மோகனதாசன், வயது-42, முது நிலை விரிவுரையாளர், சு.வி.அ.க.நி, கிழக்குப் பல்கலைக்கழகம்.)

ஆய்வுப் பிரதேச வசந்தன் ஆடல், வசந்தன் ஆட்டம் என்பது ஆய்வுப்பிரதேசத்தில் காணப்படும் நாட்டார் நடனமாகும். வசந்தன் பாடல்களுக்கும், ஆட்ட முறைகளுக்கும் ஏற்ப மத்தளம் அடித்தல், தாளக்கட்டுக்கள் மாறுபடும் அனுமான் வசந்தன் மிகவும் கடினமாகவும், விரைவாகவும், துரிதகதியில் ஆட்டமுறைகளும், பாடல்களும் காணப்படும் அதற்கு ஏற்ப மத்தளமும் அடிக்கப்படும். இதனை ஆலய சடங்குகளில் கொக்கட்டிச் சோலை, முதலைக்குடா, முனைக்காடு பகுதிகளில் காணலாம்.

இதே போன்று கும்மி, கோலாட்டம், கரகம், காவடி போன்ற கிராமிய நடனங்களின் போது மத்தளம், உடுக்கு, தாளம் என்பன ஒரே நேரத்தில் பாடல்கள் இசைக்கப்படும். பாட்டிற்கும், ஆட்டங்களுக்கும் ஏற்ப மத்தளம் இசைக்கப்படும். காவடி ஆடுவோர் ஆவேசம் கொண்டு ஆடுவதற்குரிய உத்வேகத்தைக் கொடுக்கக் கூடிய இசைக்கருவியாக மத்தளம் பயன்படுத்தப்படுகிறது. இதனை மட்டக்களப்பு, மண்டூர், திருக்கோயில் போன்ற கிராமங்களில் நடைபெறும் காவடிச்சிந்தை மத்தளம் அடித்துப் பாடி ஆடுவது தொன்றுதொட்டு மரபாக இருந்து வருகின்றது எனலாம்.

ஆய்வுப் பிரதேசத்தில் கண்ணகி அம்மன் சடங்குகளின் போது இரவு வேளையில் கண்ணகி உலா இடம்பெறும் அவ்வேளையில் கண்ணகி கும்மி பாடப்படும், அதே நேரத்தில் சிறவர்கள் கும்மிக்கு நடனம் ஆடுவர். அவ்வேளையில் கும்மிப்பாடல்கள் பாடுவதற்கு முன்பு சந்தம் பாடப்படும் முதலாம் காலம், துரித காலம் இரண்டிலும் சந்தங்கள் பாடப்படும். அப்போது மத்தளம் சந்தத்திற்கு ஏற்ப தாளக்கட்டுக்களை வெளிப்படுத்தும் போது இதனைக் கண்டுகளிப்போருக்கும், காதால் கேட்போருக்கும் இரசனைக்குரியனவாக அமையும் என்பது ஆய்வு பிரதேச மக்களது கருத்தாகும்.

ஆய்வுப்பிரதேசத்தில் மத்தளமானது கூத்துக்களில் பிரதானமாகவும், ஏனைய கிராமிய கலை வடிவங்களான வசந்தன், கோலாட்டம், கும்மி, கரகம், காவடி போன்ற நடனங்களுக்கு பக்க வாத்தியமாகவும் ஆலயங்களில் பாடப்படும் காவடிச் சிந்துகளுக்கு பக்கவாத்தியமாகவும் வாசிக்கப்படும். இதனை பிரமனின் (நான்முகன்) வாத்தியம் எனக் கருதுவர். இதனை ஒத்ததாக கண்டியன் நடனத்தில் வாசிக்கும் தாளக்கருவியும் நடந்து, நடந்து இடுப்பில்

கட்டியப்படி வாசிக்கப்படுகின்றது. மத்தளம் கூத்துக்கள் நிகழ்கின்றபோது அதனை மக்கள் உற்சாகத்துடன் இரசிக்கும் வண்ணம் உயிர் ஊட்டுகின்றது எனக் கூறக் கூடியதாக உள்ளது எனலாம்.

**ஆய்வுப் பிரதேசத்தில் சங்கின் பங்களிப்பு**

ஆய்வுப் பிரதேசத்தில் சங்கானது வழிபாடு வாழ்வியல்,சடங்குகள், ஊர்வலங்கள், மரணக் கிரியைகள், கோயில் பூசைகள் என அனைத்து விடயங்களிலும் சங்கின் பங்களிப்பு இன்றியமையாத ஒன்றாக காணப்படுகின்றது எனலாம்.

ஆய்வுப் பிரதேசத்தில் மார்கழி மாதம் திருவெம்பாவை, திருப்பாவை விரத காலங்களில் இந்து மாமன்றம் வருடாவருடம் அதிகாலையில் உமாதேவி சமேத நடராஜ பெருமானை சப்புரம் கொண்டு (சிறிய தேர்) அலங்கரித்து இளைஞர்களை காரைதீவு கண்ணகி அம்மன் ஆலயத்திற்கு அதிகாலை 4.00 மணிக்கு வரவழைத்து சப்புரத்தினை ஆயலத்தில் இருந்து திருப்பள்ளியெழுச்சி பாடிய வண்ணம் நடந்து ஏனைய ஆலயங்களுக்கு செல்வர். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு ஆலயத்திற்கு செல்வர். ஒரு திருப்பள்ளியெழுச்சிப் பாடலை பாடிய பின் சங்கையும் மணியையும் அடிப்பர். இம்மரபு தொன்றுதொட்டு பயின்நிலையில் காணப்படுகின்றது. அதே நேரத்தில் திருவெம்பாவை பூசை அதிகாலையில் ஆலயத்தில் இடம்பெறும் போது பூசை இடையே திருவெம்பாவை பாடல்கள் இசைக்கப்படும். ஒவ்வொரு திருவெம்பாவை பாடல்கள் முடிந்து அதாவது ''ஈதே எந்தோழி பரிசேலோரம் பாவாய்'' என பாடிய பின்பு சங்கு, மணி என்பன வாசிக்க அடுத்த பாடல் பாடப்பட உள்ளது. என திருவெம்பாவை பாடல்கள் சங்கு, மணி போன்ற இசைக்கருவிகளின் உதவியுடன் பாடப்படுகின்றன. ஆய்வுப் பிரதேசத்தில் வெள்ளிக் கிழமைகளில் அனைத்து இந்து ஆலயங்களில் மாலை நேர பூசைகள் இடம்பெறும் அவ்வேளையில் கர்ப்பகிரஹத்தில் பூசை இடம்பெற்று பஞ்சபுராணங்கள் பாடப்படும் அப்பூசையில் ஆரம்பம் முதல் தீபாராதனை பூசைகளின் போதும் சங்கு, காண்டாமணி, மேளம் என்பன அனைத்து ஆலயங்களிலும் இசைக்கப்படுகின்றன. இச் சங்கினை சிறுவர்கள், இளைஞர்கள், பெரியோர்கள் அனைவரும் மாறி மாறி ஊதுவார்கள். இதனாலேயே ஆலயத்தில் பல சங்குகள் காணப்படும்.

அடுத்து ஒருவர் இறந்த பின்னர் அவ் வீட்டில் 30 நாட்கள் தொடர்ச்சியாக வைகுந்த அம்மானை பாடப்படும். இவ்வாறு பாடிய பின்னர் 31 நாள் வைகுந்த அம்மானையின் வாழி பாடுவார். அன்றைய தினத்தில் அந்தணர்கள் மரண வீட்டில் பஞ்சகவ்வியம் தெளித்து இறந்தவரின் நிழற்படத்திற்கு பூமாலைஇட்டு, படையல் வைத்து மந்திரங்கள் உச்சாடனம் செய்து பூசைக்கு இடையே அந்தணர் அல்லது மரணவீட்டு உறவினர்கள் ஒருவரால் மூன்று முறை சங்கு ஊதுவர். அச் சங்கொலி கேட்ட மரணித்தவரது ஆத்மா மரண வீட்டின்

கூரையில் இருந்து இறைவனிடம் செல்வதாக இந்து மக்களின் வாழ்வியலில் காணப்படும் நம்பிக்கையாகும். இப்பழக்கம் குறிப்பிட்ட இறந்தவர் இறந்து ஒருவருடம் கழிந்த பின்னரும் அந்தணரை வரவழைத்து, படையல் வைத்து, மூன்று முறை சங்கு முழக்கப்படும். இதனால் இறந்தவரது ஆன்மா நிரந்தரமாக வைகுண்டம் செல்வதாக மக்களது நம்பிக்கையாகும். இம்மரபு தொன்றுதொட்டு தற்காலம் வரை பின்பற்றப்பட்டு வருகின்றது எனலாம்.

எனவே ஆய்வுப்பிரதேசத்தில் தொன்றுதொட்டு சங்கு மக்களது வாழ்வியலில் முக்கிய இடத்தினை வகிக்கின்றது. இதனை வழிபாடுகளிலும், ஊர்வலங்களிலும், மரணக்கிரியைகளிலும், கிராமிய நடனங்களிலும், ஆலய பூசைகளிலும், அபிராமி அந்தாதி, சகலகலாவல்லிமாலை, திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை என்பன பாடுகின்ற வேளை களிலும் சங்கு ஆய்வுப்பிரதேச மக்களால் இசைக்கப்பட்டன. இது சங்ககாலம் தொடக்கம் தற்காலம் வரை மக்களின் வாழ்வியலில் முக்கிய இடத்தினை வகிக்கின்றது..

## கொட்டு இசைக்கருவியின் பங்களிப்பு

சங்க காலத்து தோற்கருவிகளின் ஆதிக்கம் ஆய்வப்பிரதேசத்தில் அதிகமாக காணப்படுகிறது அந்தவகையில் கொட்டு என்னும் தோற்கருவியானது தொன்றுதொட்டு குமாரத்தன் சடங்கு கோயிலில் இதன் பங்களிப்பு அளப்பெரியது என கள ஆய்வில் அறியக்கூடியதாக் உள்ளது மட்டக்களப்பு மாவட்ட ஆகமம் சாராத சடங்கு கோயில்களில் குமாரத்தன், குமார தெய்வம் ஆலயத்தில் மட்டுமே கொட்டு இசைக்கருவி பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பது இதன் சிறப்பம்சம் எனக் கூறக்கூடியதாக உள்ளது.

குமாரத்தன் கோயில் சடங்கில் முக்கோண பந்தல் அமைத்து மூன்று பக்கங்களும் இயற்கைப் பொருட்களைக் கொண்டு அலங்கரிப்பர் பந்தலில் நிலத்தில் வெள்ளைச்சீலை விரித்து மடை வைப்பர் தெய்வமாடுபவர் (உருப்பெற்று ஆடுவர்) காலில் சதங்கை கட்டி தலையில் தொப்பி போன்ற ஒருமுடி அணிந்து கையில் கோடாரி அல்லது தடி எடுத்து ஆடுவர் தெய்வாதி ஆடுவதற்கு பூசாரி குமாரத் தெய்வத்திற்குரிய பாடலைப்பாட அப்பாடலுக்கு ஏற்ப கொட்டு கொட்டப்படும் என கள ஆய்வில் அறியக்கூடியதாக இருந்தது. (வீரக்குட்டி வேலுப்பிள்ளை, வயது - 68 , பூசாரி, தளவாய் ஏறாவூர்) மற்றும் குமாரத்தன் கோயில் சடங்கில் கொட்டு எனப்படும் இசைக்கருவி பிரதான வாத்தியமாக கருதப்படுகிறது இது பறையின் அமைப்பை ஒத்து காணப்படுகிறது பறையை உருவாக்குவதற்குப் பயன்படுத்தப்படும் பொருட்களினாலேயே இதனையும் உருவாக்குகின்றனர் ஆனால் பறையை விட கொட்டு பெரியதாக காணப்படும் சுமார் 3 அடி நீளமுடையதாகவும் காணப்படுகிறது கொட்டு இசைப்பதனை பரம்பரைபரம்பரையாக இசைக்கப்பட்டு வருகிறது குறித்த பரம்பரையில் வந்தவர்கள் மட்டுமே இதை இசைக்கும் பாண்டித்தியம் பெற்றவர்களாக காணப்படுகின்றனர்

கொட்டின் இசைக்கு ஏற்ப (தெய்வவாதி) தெய்வம் ஆடுபவர் ஆடுவார். கொட்டு இசைப்பவரே குறித்த இடத்தில் இருந்தே இசைப்பர் ஒரு பகுதியை கையால் தட்டியும் மறுபகுதியைத் தடியால் தட்டியும் இசையெழுப்புவார்கள் அதேநேரத்தில் கொட்டு இசைப்பவர் இருகையால் தட்டியே இசையெழுப்புவார் (இன்பமோகன், வ., :2012:141).

எனவே அரிய கொட்டு இசைக்கருவி மட்டக்களப்பு மாவட்டத்தில் குமாரத்தன் தெய்வ வழிபாட்டில் மட்டுமே இசைக்கப்படுகிறது இதனை ஏனைய கோயில்களிலோ சடங்குகளிலோ இசைப்பதில்லை இதனை குறித்த வேடுவர் சமூகத்தினர் மட்டுமே தங்களது வழிபாட்டில் இதனை பரம்பரை பரம்பரையாக பயன்படுத்தி வருகின்றனர்.

**சிலம்பு**

சிலம்பு என்பது சங்ககாலத்தில் தமிழர்களால் கால்களில் அணியப்பட்ட அணிகலன் ஆகும் சங்ககாலத்தில் இதனை ஆண் , பெண் இருபாலாரும் அணிந்தனா இதனால ஆண் சிலம்பு, பெண்சிலம்பு என இரண்டாகப் பிரித்தனர் இது கண்ணகி வழிபாட்டுடன் நெருங்கிய தொடர்பினை தொன்று தொட்டு கொண்டுள்ளது இதன் தொன்மையினை நோக்கும் போது சிதம்பரத்தில் அடுகின்ற நடராஜர் காலத்தில் சிலம்பை அணிந்துள்ளனர் என்பதனை தேவாரம் மூலம் காட்டப்படுகிறது.

" நிரைகழல் அரவம் சிலம்பொலி…. "

இதே போன்று கருவூர்தேவர் இயற்றிய திருவிசைப்பாவில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

யாழொலி சிலம்பும் இஞ்சி சூழ்ந்த தஞ்சை
இராசரா பேச்சுர திவர்க்கே…. (9.4.4)

இவ்வாறு சங்ககாலத்திலும் பக்தி இலக்கியங்களிலும் 'சிலம்பு' சிலம்பின் பங்களிப்பு என்பன எடுத்து இயம்படுகிறது. மற்றும் கோயில்களில் வாசிக்கப்படும் சிலம்பு கண்ணகியம்மன் அணிந்த சிலம்பாக அதாவது பெண் தெய்வத்திற்குரிய சிலம்பாக கருதப்படுகிறது இதே போன்று ஆண்கள் அணியும் சிலம்பும் காணப்படுகிறது அதுமட்டுமின்றி ஆண்கள் அணியும் சிலம்பு பெரிதாகவும் தெளிவானதாகவும் பெரிய முத்துக்களை உடையதாகவும் காணப்படும் அதே நேரம் பெண்கள் அணியும் சிலம்பானது முத்துப்பரல் கொண்ட வட்டவடிவமான அமைப்பினைக் கொண்டது இவை கலீா கலீா என்ற ஒலியினை எழுப்பக்கூடியவை ஆகும். அதே நேரத்தில் கையில் மணிக்கட்டில் என கண்ணகி அம்மன் சடங்குகளில் ஆலயத்தில் தெய்வம் ஆடுபவர்களாலும் பூசாரிகளாலும் ஆய்வுப்பிரதேச கண்ணகி ஆலயங்களில் பயன் நிலையில் காணப்படுகிறது.

ஆய்வுப்பிரதேசத்தில் மாரியம்மன் தாலாட்டில் சிலம்பின் ஒலி , அதன் நிறம் என்பன கூறப்பட்டுள்ளது அதற்கு காரணம் இங்கு கண்ணகியம்மன் வழிபாட்டில் இதனை ஒரு அணிகலனாகவும் இசைக்கருவியாகவும் பயபடுத்துகின்றனர் இதனை

" சிலம்பு கல கலன சிவமுத்து – தாயார்

செஞ்சிலம்பு ஒசையிட சிவமுத்து "

( மட்டக்களப்பு வாழ்வும் வழிபாடும் பக்- 133)

கண்ணகியம்மன் சடங்கில் பல பாடல் வகைகள் பாடப்படுவது மரபாகும் அங்கு கண்ணகியம்மன் தாலாட்டு பாடும் பொழுது உடுக்கை, சிலம்பொலி சேர்ந்து ஒலிக்கும் போது தேவாதிகள் கரம் எடுத்து ஆடும் விளையாட்டும் காட்சி பக்தி பரவசத்தினை கொடுக்கின்றது இதிலிருந்து உடுக்குடன் சிலம்பொலி சேர்ந்து ஒலிக்கும் போது பக்தி ரசத்தினை தரவல்லது என அறியக்கூடியதாக உள்ளது மற்றும் தெய்வாதிகள் உருக்கொடுக்கும் போது உடுக்கை, சிலம்பு, அம்மானைக்காய் என்பன சேர்த்து ஒலிக்க அகவல் பாடப்படுவதாக ஆய்வுப்பிரதேச மக்கள் கூறுகின்றனர் இருந்தபோதிலும் அகவல் பாவிற்கு உடுக்கு சிலம்பு அம்மானைக்காய் சேர்ந்தொலிக்கும் போது தெய்வாதிகளுக்கு இலகுவாக உரு ஏற்றப்படும். (நடராஜா எப்.எக்ஸ். சீ, 1980:132).

சடங்குகளில் பயன்படும் சிலம்பானது கையில் அணியும் போது கைச்சிலம்பு என்றும் காலில் அணியும் சிலம்பைக் காற்சிலம்பு எனவும் குறிப்பிடுவர். இரு சிலம்பையும் அதன் வடிவத்தைக் கொண்டு வேறுபடுத்த முடியும் கையில் அணியும் சிலம்பானது வட்டமானதாகவும் தெய்வாதிகள் காலில், கையில் மேல் எறிந்தும், பிடித்தும் என சிலம்புடன் ஆடுவர் மற்றும் சடங்கில் பங்குபற்றும் பக்தர்கள் சிலம்பினை இசைக்கும் வழக்கமும் உள்ளது என்லாம். அது மட்டுமின்றி வீடுகளில் இடம்பெறும் 'சர்க்கரை அமுது' மாரியம்மன் சடங்கிலும் அம்மனது மடையில் சிலம்பு, அம்மானைக்காய் என்பனவற்றை வைத்து வழிபடுவர் பின்பு பூசகர் உடுக்கை அடித்து மற்றொரு பூசாரி சிலம்பை இசைத்த வண்ணம் மாரியம்மன காவியம் பாடுவர் இது ஆய்வுப்பிரதேசத்தில் தொன்று தொட்டு பின்பற்றப்படுகின்ற மரபாகும்.

கண்ணகி அம்மன் குளிர்த்திச் சடங்கில் உலக நன்மை வேண்டி பூசகர் (கட்டாடியார்) சிலம்பை கையில் அணிந்து உடுக்கையடித்து குளிர்த்திப்பாடலுடன் வாழிபாடி சடங்கின் நிகழ்வுக்களை நிறைவு செய்வர் அதுமட்டுமின்றி காளிகோயில் சடங்கில் மாரியம்மனுக்கும், தெய்வமாடுபவரும் சிலம்பு அணிந்து ஆடி கட்டு, வாக்கு செல்லும் மரபும் இங்கு காணப்படுகிறது எனவே சிலம்பு தொன்று தொட்டு ஒரு சடங்கிற்குரிய இசைக்கருவியாக பயன் நிலையில் காணப்படுகிறது எனலாம்.

**அம்மானைக்காய்**

கண்ணகி அம்மன் வழிபாட்டில் பயன்படுத்தப்படும் சிறிய உருவில் காணப்படும் உருளை வடிவமான காய் போன்ற அமைப்பை உடையதே அம்மானைக்காய் எனப்படும் இதன் உள்ளே முத்துக்குள் இருக்கின்றன முத்துக்கள் உள்ளிருப்பதனால் ‘‘கலீர் கலீர்’’ என்ற ஒலியெழுப்பப்படும் பொதுவாக இதனை அம்மன் வழிபாட்டில் அதாவது பெண் தெய்வவழிபாட்டிலே அதிகமாக பயன்படுத்துவர் ஆய்வுப்பிரதேசத்தில் கும்பம் வைத்து கும்பத்தின் மீது குறித்த பெண்தெய்வத்தின் முகக்களையை வைத்து அலங்கரித்து அதன் மேல் சிலம்பு அம்மானைக்காய் என்பவற்றை வைப்பர். பூசை இடை நடுவே தெய்வாதிகளை உருவேற்றிய பின் சிலம்பை கையிட்டு அம்மானைக்காய்களே தெய்வாதிகள் மேலே எறிந்து மீண்டும் அதனை கைக்குள் பிடிப்பர். மற்றும் கண்ணகியம்மன் சடங்கின் இறுதி நாள் குளிர்த்தியின் போது குளிர்த்திப்பாடல்களை உடுக்கையடித்து பாடும் பொழுது சிலம்பு அம்மானைக்காய் என்பவற்றை கொண்டு இனிய இசையை எழுப்புவர்.

ஆய்வுப்பிரதேசத்தில் இதனை அம்மன் சடங்குகளில் அலங்காரப் பொருட்களாகவும் சடங்கு பூசைகளில் தெய்வமாடல் கட்டுச் சொல்லுதல் பெண் தெய்வம் ஆடல் குளிர்த்திப்பாடல் பாடுதல், போன்ற சடங்கு சார் நிகழ்வுகளில் இதனை சிலம்பு, மணி, குரவை, உடுக்கு போன்ற இசைக்கருவிகளுடன் சேர்ந்து ஒலிக்கும் போது ஒரு வகையான அதிர்வுகளை பிரதேச மக்கள் உணர்வதாக கூறப்படுகிறது வீட்டுச் சடங்குகளிலும் சர்க்கரை அமுது (மாரியம்மன் சடங்கு) போதும் பூசகர்கள் இதனை அலங்காரப்பொருளாகவும் அம்மன் காவியம் பாடும் போது இசைக்கருவியாகவும் பயன்படுத்துவர். இருந்த போதிலும் சிலம்பு அம்மானைக்காய் என்பன சடங்குகளில் மட்டுமே இசைக்கருவிகளாக பயன்படுத்தப்படுத்து கின்றனர். அதேநேரம் நுண்கலைத் துறை மாணவர்கள் சடங்கிசை. கிழக்கிசை போன்ற குழுப் பாடல்கள் நிகழ்ச்சிகளின் போது சடங்கினை செயல்முறை மூலமும் பாடல்கள் மூலமும் நிகழ்த்துகை நிகழ்த்தும் போது இதனையும் பயன்படுத்துவர்.

**மணிகள்**

இந்து சமய கிரியைகள் அனுட்டானங்களுடன் மணி இன்றியமையாத ஒன்றாக கருதப்படுகிறது இங்கு ஆகமம் சார்ந்த வழிபாட்டு முறைகள், ஆகமம் சாரா வழிபாட்டு முறைகள் இரண்டிலும் மணிகள் முக்கிய இடத்தினை வகிக்கின்றது இவை வெண்கலம், செம்பு, இரும்பு போன்ற உலோகங்களினால் உருவாக்கப்படுகின்றன மணிகளை அதிகமாக பூசகர்கள் அந்தணர்கள் என்பன பயன்படுத்துவர். மணிகள் பல வகைப்படுகின்றன. அவையாவன கைமணி, காண்டாமணி, கொத்து மணி அசையாமணி என்பனவாகும் மின்சார வசதியற்ற காலத்தில் ஆலயங்களின் மணியோசை கொண்டே ஆலயத்தில் இடம்பெறம்

அபிஷேகம், பூசைகள். திருவிழா சடங்குகள், கதவுதிறத்தல், ஊர்வலம் என்பவற்றை மக்கள் அறிந்து கொண்டனர்.

மணிகளின் அமைப்பினை நோக்கும் போது நீண்டும், குறுகியும் குமிழ் வடிவமானதாகவும் காணப்படும் அதன் உட்பகுதியில் பருமனுக்கு தகுந்த வகையில் சிறு மெல்லுருவான ஒன்று தொங்கவிடப்பட்டிருக்கும் ஆய்வுப்பிரதேசத்தில் காணப்படும் கோயில்களில் ஆலய அந்தணர் பூசைக்கு வரும் போது கோயில் மணிக்கூட்டு கோபுரத்திற்கு சென்று காண்டாமணியை ஒலிக்கச் செய்வர் இது பூசை இடம்பெறுவதற்கு அந்தணர் வந்துள்ளார் என்பதனை மக்களுக்கு அறியத்தருவதாக காணப்படுகிறது என களஆய்வில் அறியக்கூடியதாக உள்ளது. (சண்முகரெத்தினம் மகேஸ்வரக்குருக்கள், வயது 49, கண்ணகை அம்மன் பிரதான குருக்கள், காரைதீவு)

ஆய்வுப்பிரதேசத்தில் சடங்கு கோயில்களில் கலியாணக்கால் நாட்டுதல் மற்றும் சடங்கு ஆரம்பிக்கும் முதல் நாள் அன்று கடலில் நீர் எடுத்து வர கோயில் தர்மகத்தாக்கள் உட்பட பூசகர்கள் அனைவரும் பறை, சங்கு, மணிகள் என்பன இசைக்க தக்கதாக சென்று கடல் நீரை எடுத்து கோயிலுக்கு வரும் வரை வீதிகளில் ஏனைய இசைக்கருவிகளுடன் மணிகளும் ஒலிக்கப்படும்.

**முடிவுரை**

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆகமம் சாரா வழிபாட்டில் ஏராளமான இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றில் தோற்கருவிகள் அதிகமாக பயன்படுத்தப்படுகின்றன. இம்மாவட்டத்தில் ஆகமம் சார் வழிபாட்டை விட ஆகமம் சாரா வழிபாடு மக்கள் மத்தியில் முக்கிய பங்கினை வகிக்கின்றது. ஆகமம் சாரா வழிபாட்டில் பாடப்படுகின்ற காவியம், அம்மானை, உலா, பிரார்த்தனை, பள்ளு, வாழி என்பன வழிபாட்டின் போது மக்களின் பிரச்சினைகளுக்கும், தொற்றுநோய்களுக்கும் மருந்தாக அமைகின்றன. களஆய்வின் போது பூசகர்கள் பாடுகின்ற பாடல்களில் காணப்படும் சந்தங்கள், பாடல்வரிகளில் காணப்படும் நடை, வார்த்தைப்பிரயோகங்களில் காணப்படும் அதிர்வலைகள் என்பன மக்களின் மனங்களை ஆற்றுப்படுத்துபவையாகக் காணப்படுகின்றன. இவற்றுக்கு பக்கபலமாக காணப்படுவது இசைக்கருவிகளின் பங்களிப்பாகும். இசைக்கருவிகளில் வாசிக்கப்படும் சொற்கட்டுக்கள், தருக்கள், என்பன மக்களின் காதுகளுக்கு ஒருவகை புத்துணர்ச்சியையும், பக்தி உணர்வினையும் கொடுக்கின்றன. அத்துடன் அம்மானைக்காய், சிலம்பு என்பன சடங்கு இசையினை மேலும் மெருகூட்டுகின்றன. இவ்விசைக்கருக்கருவிகளில் வாசிக்கப்படும் சொற்கட்டுக்கள், வாசிக்கும் முறை என்பன தனித்துவமிக்க இசைமரபினை சுட்டி நிற்கின்றன. அத்துடன் பல தீரா நோய்களுக்கும் உள ஆற்றுப்படுத்தல். உள சிகிச்சை முறைகளாக

அமைகின்றன. கலைக் கண்ணோட்டத்தில் பாா்க்கின்ற போது வேலன் வெறியாடல் போன்ற சங்ககால நிகழ்த்துகை மரபினை ஒட்டி நிற்கின்றன. சடங்கு மரபில் பாடப்படுகின்ற இசைவடிவங்கள், பாடுகின்ற கலைஞர்கள், இசைக்கப்படுகின்ற இசைக்கருவிகள், அலங்கார அமைப்புக்கள், ஆலய பின்னணி என்பன சிறந்த ஒரு ஆற்றுகை நிகழ்வினை மனங்களின் முன் கொண்டு வருகின்றன.

### நேர்காணல் கண்டோர் விபரங்கள்

தேவன்.த. வயது-65, குருக்கள், செட்டிபாளையம் ஸ்ரீலஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயம், செட்டிபாளையம்.

மோகனதாசன், வயது-42, முது நிலை விரிவுரையாளா், சு.வி.அ.க.நி, கிழக்குப் பல்கலைக்கழகம்.

நல்லதம்பி. த, அண்ணாவியாா், வயது-64, முதலைக்குடா.

வேலுப்பிள்ளை. வீ, வயது- 68, பூசாரி, தளவாய், ஏறாவூா்.

மகேஸ்வரன்.ச, ஆலய குருக்கள், கண்ணகை அம்மன் ஆலயம், காரைதீவு.

### உசாத்துணை


அரசரெத்தினம், ஆ., (1994), செட்டிபாளையம் ஸ்ரீலஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய வரலாறு, புனித செபத்தியாா் அச்சகம், மட்டக்களப்பு.

இன்பமோகன், வ., (2012) கிழக்கிலங்கைச் சடங்குகள், குமரன் புத்தக இல்லம்.

கந்தையா, வீ. சி., (1964), மட்டக்களப்புத் தமிழகம் , ஈழகேசரிப்பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம் , யாழ்ப்பாணம்.

சுந்தரம், வீ .ப .கா., (2006), தமிழிசைக்கலைக் களஞ்சியம் (முதலாம் தொகுதி) ., பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி.

தில்லைநாதன், சா., (2015), மட்டக்களப்புத் தமிழா் பண்பாட்டு மரபுகள் , குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

நடராஜா, எப்.எக்ஸ். சீ., (1980), மட்டக்களப்பு மக்கள் வளமும், வாழ்க்கையும் , மட்டக்களப்பு இந்து வாலிபா் முன்னணி.

மகேஸ்வரலிங்கம், க., (2008), மட்டக்களப்பு வாழ்வும், வழிபாடும், கொழும்புத்தமிழ்ச் சங்கம், கொழும்பு.

மகேஸ்வரலிங்கம், க., (1996), மட்டக்களப்பு சிறு தெய்வ வழிபாடு ஓா் அறிமுகம் , தில்லை வெளியீடு, மகிழடித்தீவு.